

திருகோணமலை தம்பலகமம்

கூட்டாம்புளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்டவரும்

உயர் சைவ வேளாண் மரபில் உதித்தவருமான

அமரர்

# திருமதி. யோகாம்பிகை அரியரெத்தினம்

அவர்களின்

## 31ம் நாள் நினைவுமலர்

05 - 11 - 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# யோகாம்பிகை அரியரெத்தினம்

அவர்கள்

மண்ணகத்தில்
27-08-1940

விண்ணகத்தில்
06-10-2006





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.

# யோகாம்பிகை அரியரெத்தினம் அவர்கள்



மண்ணகத்தில்
27 - 08 - 1940

விண்ணகத்தில்
06 - 10 - 2006

## திதி வெண்பா

வியவருடம் புரட்டாதி பூரணையில்
வியக்கும் வகையினிலே விடைபெற்றாயே
தயவின்றி உனைக்கவர்ந்த கூற்றுவன் செயலுக்கு
துயரற்று நீயும் துணை போனதேனோ தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஆதிகோணேசர் அருள்பாலிக்கும் பதியாம்
தம்பலகமம் கூட்டாம்புளியூரினிலே
புகழும் பெருமையும் ஒருங்கே பெற்று
பலரின் பாராட்டுக்கும் பரிவினிற்கும்
உரித்தான உத்தம தாரமே, தாயே
பண்பு பாசத்தின் உறைவிடமாய்
பார்போற்றிட வாழ்ந்த நீவிர்
வாழ்வினை துறந்து நீவிர்
காலன் கரம்பிடித்த எமது
அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திவேண்டி
கண்ணீர்த் துளிகளினால் பாதம் நனைத்து
அன்புடன் சமர்ப்பணம் செய்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணபதி துணை

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

# தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே.

# திருவாசகம்

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த
இன்பமே என்னுடை அன்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

அண்ணலே யெனை யாண்டு கொண்ட ருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே
கண்ணி னாற்றிருக் கயிலையிலிருந்தநின் கோலம்
நண்ணி நான் தொழு தயந்தருள் புரியெனப் பணிந்தார்.

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெரு வாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



## திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

### சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச்சே யோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராகி முனிவராயத் தேவராயச்
சொல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அறுங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவியறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.யோகாம்பிகை அரியரெத்தினம்
# அவர்களின்
# வாழ்க்கைச் சரிதம்

மாவலி பாயும் ஈழவளநாட்டிலே
தென்னையோடு நெல்லும் செழித்து வளரும்
பார்போற்றும் ஆதிகோணநாதர் உறைபதியாம்
தம்பலகமமதனில் பெருமைசேர் கூட்டாம்புளியினிலே
சீர்பூத்த சைவவேளாளர் குலமரபினிலே
பேராளன் எனப்போற்றும் கதிர்காமத்தம்பிக்கும்
தாம்பத்திய நாயகியாம் நாகமுத்துவிற்கும் (அன்னம்மா)
ஊனமிலா ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதுதனில்
பார்சிறக்க யோகாம்பிகை வந்துதித்தார்.

தவழ்ந்து நடைபயின்று பவனிவரக்கண்டே
பெற்றோரும் உற்றோரும் மனம மகிழ்ந்திருக்க
செல்வம் மிகுந்து வளம் பெருகும் வேளையிலே
உடன்பிறப்புக்களான செல்வராஜாவும்,
ஜானகியும் மூத்தோர்களாக வந்தமைந்தனர்.
சிறந்த நற்குழவிகளாய் வாழ்ந்துவரும் போதினிலே

குறுகுறு நடந்தே புள்ளிமானாய் துள்ளிவரும் காலமதில்
பள்ளிவளை தேடி சாரதாவிலும், பின் ஆதிகோணேஸ்வராவிலும்
பாங்குடனே கல்விதனை பெற்றோர் கற்க வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரும் மதியாய் தினம் தினமாய் வளர்ந்தே
வதன மகளாய்ப் பருவ மெய்தினார்.

கனிவாகப் பேசி அனைவரையும் கவர்ந்திடுவார்.
இறைபக்தி கொண்டே விரதமதை அனுஷ்டிப்பார்
வாலைக்குமரியாக வளர்ந்துவரும் போதினிலே
இருபத்து இரண்டாம் வயதில் அரியரெத்தினத்தை
ஊரார் போற்ற பொருத்தமுற மணம்செய்தார்.
கருத்தொத்த தம்பதியினராய் வாழ்ந்து வரும்வேளை
கணவனின் வரவுகொண்டு செலவு செய்வார்.
செல்வம்சேர்க்க அனுதினமும் பாடுபட்டார்.
சோர்வு அறியாத நங்கை அவர்.
சொல்லரிய வாழ்வு வாழ்ந்து வரும் நேரமதில்
குலம் சிறந்தோங்க வசுமதியையும், பின்னே
நலம்பெருக சிவலோகிதனையும் உடனே
இனம் சிறக்க லவலோகிதனையுமே
குழவிகளாகப் பெற்றெடுத்து அகமகிழ்ந்தார்.

பெற்ற குழந்தைகளை உயர்த்த எண்ணி
செல்வ மகளை மோகனசுந்தரத்திற்கே
மணம்செய்து வைத்தே அழகு பார்த்தார்
மூத்த மகனை நிதி உத்தியோகத்தராக்கியும்,
மணம்செய்து மாண்புற வைத்து நிமலினி எனும்
நல்லாளை தனது மருமகளாக்கி மகிழ்ந்தார்.
இளைய மகனை இழந்தே தினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமுருகி துயருற்றிருப்பார்.
பிள்ளைகளுக்கோர் நோய் வந்தால்
அருகிருந்தே அணைத்தெடுப்பார்
பேரக்குழந்தைகளோடு நற்பாசம் கொள்வார்.
லாவண்யா, சுபண்யாவுடன் சத்ருாகன், யதுர்ஷன்,
டிலக்ஷன் ஈறாய் அருகமர்ந்தே இனிதாய்
பலகதைகள் பேசி மகிழ்ந்திருப்பார்.

மைத்துனிகளாம் அருமைநாயகமும், புஸ்பவதியுடனும்
கதிர்காமநாதனையும் மைத்துனராய்ப் பெற்று
மகிழ்வுடன் வாழ்ந்தார்.
நல்ல வாசுகி, ஜெயலோகிதன், ஜெயசங்கர்
என்போர் நற்பெறாமக்களாயிடுவர்.
மாமியென மகிழ்ந்தபடி தேடிவரும்
கலா, ஜெயமதி, ஜெயகாந்தன் உடன் ஜெயபாரதி,
ஜெயபிரகாஷ்ற்கும் பாங்குடனே வழிகாட்டும் மாமியாயிடுவார்.

கடமை தவறாத தெய்வமவர்.
உடைமையென தம் குலமுயர்த்த எண்ணி
அரும்பணிகள் செய்தே ஏற்றம் கண்டார்.
பொருள் வளமறிந்து கணவனோடு மகிழ்ந்திருப்பார்
வாழ்வின் துன்பங்களை விரட்டியடித்துவிட்டு
வாழ்க்கைத் துணைவனோடு அன்பு கொள்வார்.
இறைபதியாம் தம்பலகமத்திலே வாழ்ந்தபோதும்
தன் உறவுகளோடு எப்பொழுதும் இணைந்திருப்பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை எளியோர் கண்டால்
பாகாய் உருகி அவர் துயர்துடைப்பார்
குறையாத செல்வத்தோடு
கூட்டாம்புளியில் தனிமனையில் வாழ்க்கையிலே
காற்றோடு வந்த மாயக்கயிறொன்று
போற்றிய வயது அறுபத்தாறுதனிலே
மாற்றியது உடலை மண்ணோடு கொண்டே
பாய்ந்தோடும் பாலாறு நின்றதுபோல்
சாய்ந்தாளம்மா யோகம் சங்கரன் தன் காலடியில்.



இளமைக்காலத்தில்



குடும்பத்தாருடன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கள் அருமை அம்மம்மாவே.......

கடந்த 6ம் திகதி உங்கள் மறைவுச்செய்திகேட்டு துடியாய் துடித்தோம். உங்கள் அன்பையும், பாசத்தையும் நாங்கள் எப்படி மறப்போம். நாங்கள் நோய்வாய்ப்பட்டது கேட்டால் ஓடோடி வந்து நாங்கள் சுகமாகுமட்டும் எங்களோடு இருந்து, பின்புதானே வீடு செல்வீர்கள். நாம் குழந்தையாய் இருக்கும்போது நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த போதெல்லாம் எம்மோடு கூடவே மருத்துவமனையில் தங்கியிருந்ததை எல்லாம் எங்களால் மறக்க முடியுமா? எங்கள் பிறந்தநாட்களை ஞாபகம் வைத்து அன்று பலகாரங்களுடன் வந்து சேருவீர்கள். நாம் இருவரும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தபோது எம்மைப் பாராட்டி பெறுமதியான பரிசில்களைத் தந்தீர்களே. அடுத்த பரீட்சைகளிலும் சிறந்த முறையில் சித்தியெய்தினால் விரும்பிய பரிசுப்பொருட்களை வாங்கித் தருவேன் என்று எங்களை உற்சாகப்படுத்தினீர்களே. எங்கள் வீட்டிற்கு உங்கள் வரவைக் கேட்டால் பள்ளியால் வந்ததும் துள்ளிக் குதித்து வந்து உங்களைப் பார்த்ததன் பின்புதானே நாங்கள் மறுவேலை பார்ப்போம். அம்மா நோயுற்றால் அம்மா எனக்குச் செய்யும் உதவிகளை எல்லாம் நீங்கள் சளைக்காது செய்தீர்கள். நீங்கள் இன்னும் பலகாலம் எங்களோடு வாழாது சென்றுவிட்டீர்கள். நீங்கள் செய்த உதவிக்கெல்லாம் நாங்கள் நன்றிக்கடன் செய்யும் காலம் வருவதற்கு முன்பு நீங்கள் எங்களை விட்டுச் சென்றுவிட்டீர்களே. பாடசாலை விடுமுறை காலத்தில் உங்கள் வீட்டில் பல நாட்கள் தங்கியிருந்து மகிழ்ந்திருப்போமே. சிலகாலம் எங்கள் கல்வியால் நாங்கள் அங்குவந்து தங்கமுடியவில்லையே. எதிர்வரும் மார்கழி விடுமுறையில் பலநாட்கள் உங்களுடன் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்பினீர்களே. அந்த மார்கழி இனி எப்போதும் வரப்போவதில்லையே. உங்கள் குரலை இனி எங்களால் கேட்க முடியுமா? உங்கள் அன்பை இனி நாங்கள் பெற முடியுமா? உங்கள் நிஜ உருவத்தை இனி எங்களால் பார்க்க முடியுமா? இல்லவே இல்லை. உங்கள் நினைவைத் தாங்கிக் கொண்டு உங்கள் புகைப்படத்தை மட்டும்தானே இனி எங்களால் பார்க்க முடியும்.

**உங்கள் அருமைப் பேத்திகள்,**

**லாவண்யா, சுபண்யா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆசை அப்பம்மாவே.........

எங்களை விட்டுவிட்டு நீங்கள் எங்கு சென்றீர்கள். ஏன் எங்களை விட்டு இவ்வளவு விரைவாகச் சென்றுவிட்டீர்கள், இவ்வளவு விரைவாக பிரிந்து சென்றுவிடுவீர்கள் என்று நாம் நினைத்திருக்கவில்லையே! உவர்மலைக்கு வந்தபோதெல்லாம் எங்கள் வீட்டிற்கும் வந்து எங்களையெல்லாம் பார்த்துச்செல்வீர்கள். எங்கள் பிறந்தநாளுக்கு நீங்கள் பலகாரம் கொண்டு வருவதை எங்களால் மறக்க முடியுமா? நாங்கள் நோய்வாய்ப்பட்டது கேள்விப்பட்டால் கட்டாயம் வந்து எம்மைப் பார்த்துச் செல்வீர்களே! இனி எங்கே நாங்கள் உங்களைக் காணமுடியும். இனி எப்படி உங்கள் பாசத்தைப் பெறமுடியும்.


**பேரன்கள்**
**சத்றாகன், ஜதுர்ஷன், டிலக்ஷன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

மரணச் சடங்கிலும், அந்தியேட்டிக் கிரிகையிலும் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், மரணச்சடங்கிற்கும் அந்தியேட்டிக் கிரிகைக்கும் பல்வேறு வழிகளிலும் உதவியவர்கள், தொலைபேசி, தந்தி என்பவற்றின்மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்கள், மலர்வளையங்கள், பதாதைகள் என்பவற்றின்மூலம் அஞ்சலி செலுத்தியோர், கிரிகைகளைச் செய்ய உதவிய சிவாச்சாரியார், ஏனையோர், இந்நினைவு மலரை ஆக்க உதவியவர்கள், நினைவுமலரை அச்சிடஉதவிய அச்சக உரிமையாளர், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்

கணவன், பிள்ளைகள்,

மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



"இந்தமாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்."
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org